# திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் கிளைக் கழகம் மற்றும் வட்டக் கழகக் கூட்டங்கள்!

**மாவட்டக் கழகச் செயலாளர் –**
**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, அறிவிப்பு!**



திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் கிளைக் கழகம் மற்றும் வட்டக் கழகக் கூட்டங்கள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்!

| வரிசை எண் | நாள் | நிர்வாகம் | ஏற்பாடு |
|---|---|---|---|
| 1 | 5-12-2024 | இரா.கி.பேட்டை கிழக்கு ஒன்றியம் | பெ.பழனி ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் |
| 2 | 5-12-2024 | இரா.கி.பேட்டை மேற்கு ஒன்றியம் | சி.என்.சண்முகம் ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் |
| 3 | 5-12-2024 | திருத்தணி கிழக்கு ஒன்றியம் | கே.ராஜேந்திரன் ஒன்றிய பொறுப்பாளர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள். |
| 4 | 5-12-2024 | திருத்தணி மேற்கு ஒன்றியம் | என்.கே.கிருஷ்ணன் ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக்கழகச் செயலாளர்கள் |
| 5 | 6-12-2024 | பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் | சி.ஜெ.சீனிவாசன் ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக்கழகச் செயலாளர்கள் |
| 6 | 6-12-2024 | பள்ளிப்பட்டுதெற்குஒன்றியம் | ஜிரவீந்திரா ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் |
| 7 | 6-12-2024 | பள்ளிப்பட்டு மத்தியஒன்றியம் | பிடி.சந்திரன் ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக்கழகச் செயலாளர்கள் |
| 8 | 6-12-2024 | பள்ளிப்பட்டு பேரூர் | சி.ஜெ.செந்தில்குமார் பேரூர் பொறுப்பாளர் மற்றும் வட்டக்கழகச் செயலாளர்கள் |
| 9 | 6-12-2024 | பொதட்டூர்பேட்டை பேரூர் | டி.ஆர்.கே.பாபு பேரூர்செயலாளர் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் |
| 10 | 6-12-2024 | திருத்தணி நகரம் | வி.வினோத்குமார் நகரச் செயலாளர் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் |
| 11 | 7-12-2024 | திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் | கூளூர் எம்.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் |
| 12 | 7-12-2024 | திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் | எஸ்.மகாலிங்கம் ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக்கழகச் செயலாளர்கள் |
| 13 | 7-12-2024 | பூண்டி மேற்கு ஒன்றியம் | டி.கிறிஸ்டி(எ) அன்பரசு ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் |
| 14 | 7-12-2024 | திருவள்ளூர் நகரம் | சி.சு.ரவிச்சந்திரன் நகரச் செயலாளர் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் |
| 15 | 7-12-2024 | கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | கே.அரிகிருஷ்ணன் ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் |
| 16 | 7-12-2024 | கடம்பத்தூர் மேற்குஒன்றியம் | மோ.ரமேஷ் ஒன்றிய செயலாளர் மற்றும் கிளைக்கழகச் செயலாளர்கள் |

எனவே மேற்கண்ட கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத் தலைவர் கே. திராவிடபக்தன், தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர் பெ.சேகர், கழக விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன், கழக நெசவாளர் அணி துணை தலைவர் ஓ.ஏ,நாகலிங்கம், மாநில தொண்டரணி பயிற்சியாளர் மாஸ்டர். இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர். வி.சி.ஆர்.குமரன், பா. உதயமலர்பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி. பொதுக்குழு உறுப்பினர்கள் பா.சிட்டிபாபு, எஸ். கே.ஆதாம். வி.கிஷோர், ம.சுப்பிரமணியம், பி.ராஜேஸ்வரி ரவிந்திரநாத், மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்

**குறிப்பு ;-** 1 அனைத்து கிளைக் கழகங்களையும் முறையாக கிளைக் கழகத்திற்கு உட்பட்ட அனைவருக்கும் தகவல் கொடுத்து கூட்டம் கூட்டப்பட வேண்டும்

2 கூட்ட நிகழ்வுகளை மினிட்புத்தகத்தில் பதிவிட வேண்டும். கலந்து கொள்வோரின் கையொப்பம் பெறுதல் அவசியம்

3 ஒவ்வொரு கிளைக் கழகக் கூட்டத்தை அவரவர் ஊரில் வசதிப்படும் இடத்தில் கூட்டப்பட வேண்டும்

4 அறிவிக்கப்பட்ட தேதிகளில் காலை 10.00 மணி முதல் கூட்டங்கள் நடத்திட வேண்டும்

5 அனைத்து கிளைக் கழக கூட்டங்கள் தனித்தனியாக கூட்டப்படுவதை ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் உறுதி செய்திட வேண்டும்

6 கூட்டங்கள் கூட்டப்படுவதை சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்தல் அவசியம்

7 கிளைக்கழக மினிட்புத்தகங்களை அந்தந்த ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் முடிந்தவுடன் சேகரித்து மாவட்ட கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும்

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ**
**செயலாளர் - திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக**



திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், பாப்பாங்குளம் ஜோதி முத்து மஹாலில் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர், அவிநாசி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் கோகுல் கிருபா சங்கர், மாவட்ட அவைத் தலைவர் க.நடராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ் சரவணன் நம்பி, சேவூர் ஒன்றிய கழக செயலாளர் க.பால்ராஜ் உள்பட ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### விமானப் போக்குவரத்துத் துறையில்

# செயற்கை நுண்ணறிவு கற்றல் இயந்திரம் பயன்படுத்தப்படுமா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 3 -

விமான போக்குவரத்து துறையில் செயற்கை நுண்ணறிவு கற்றல் இயந்திரங்களை பயன்படுத்தும் திட்டம் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என மக்களவையில் அரக்கோணம் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி? எழுப்பினார்.

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் 28 நவம்பர் 2024 அன்று மக்களவையில், விமானப் போக்குவரத்து துறையின் மேம்பாட்டிற்காக செயற்கை நுண்ணறிவு மற்றும் கற்றல் இயந்திரங்கள் போன்ற கணினி தொழிநுட்பங்களை பயன் படுத்தும் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா? என்றும் அது தொடர்பான விவரங்களை உறுப்பினர்களுக்கு அளிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குரவரத்து துறை இணையமைச்சர் முரளிதர் மஹால் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் விமானப் போக்குரவரத்து துறை இணையமைச்சர் அளித்த பதில் பின் வருமாறு:

விமானப் போக்குவரத்து துறையை மேம்பாட்டினை உறுதிப்படுத்தவும், விமான நிலையங்களை நவீனப்படுத்தவும், செயற்கை நுண்ணறிவு மற்றும் கற்றல் இயந்திரம் போன்ற கணினி தொழில் நுட்பங்கள் மிகவும் உதவியாக இருந்து வருகிறது என்றும், இவற்றின் பயன்பாட்டினால் கணினி கட்டமைப்புகள் அதிகரித்து வந்துள்ளது என்றும், இதன் தொடர் வழிமுறைகள் அதிகரித்த வண்ணம் உள்ளது என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குரவரத்து துறை இணையமைச்சர் முரளிதர் மஹால் அவர்கள், மக்களவையில், திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

### அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் !

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மாற்றுத்திறனாளிகள் சார்பில் நன்றி!

## மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை !

சென்னை, டிச.3 -

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளி நல வாரிய உறுப்பினருமான ரெ.தங்கம் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார்.

குறித்து அவரது அறிக்கை வருமாறு;

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஊனம் என்ற சொல்லை நீக்கி மாற்றுத்திறனாளிகள் என பெயர் சூட்டியும், அவர்களுக்கான தனித் துறையைக் கண்டு, தனி நல வாரியம் அமைத்தும், அத் துறையை தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை வாரி வழங்கி மாற்றுத்திறனாளிகளின் இதயங்களில் இன்றும் நீங்கா அகல் விளக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை லட்சக்கணக்கான மாற்றுத் திறனாளிகள் இன்றும் கலைஞர் அவர்களை நன்றி உணர்வுடன் வணங்கி போற்றுகிறோம்.

அவரது வழியில் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் எங்கள் துறை அமைச்சரும், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டு காலத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மலர பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களான, ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லா இணைப்புச் சக்கர ஸ்கூட்டி, தன்னார்வத் தொண்டும் மூலம் நடத்தப்படும் சிறப்பு பள்ளிகளில் தங்கிப் பயிலும் மன வளர்ச்சி குன்றியோருக்கான மதிய உணவு திட்டம், கடும் மாற்றத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் பராமரிப்பு உதவித்தொகை ரூ.2000/ மற்றும் ரூ. 1500/ உயர்த்தி வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்தில் சமூக நல பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விபத்து இறப்பு தொகை ரூ. 1 லட்சத்திலிருந்து 2 லட்சமாக உயர்த்தி வழங்குதல்,கல்வி உதவித்தொகை இரண்டு மடங்கு உயர்த்தி வழங்குதல்,

சிறப்பு பள்ளியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்கான தொகை ரூ. 1200/ இருந்து ரூ.1400/ உயர்த்தி வழங்குதல், அரசுத் துறையில் பணியாற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வு பெற டி.என்.பி.எஸ்.சி. நடத்தும் துறைத் தேர்விருந்து விலக்கு மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு உட்பட்ட சாலைகளில் மாற்றுத்திறனாளிகள் கடை வைத்து வாழ்வாதாரத்தை காக்க அரசாணை வெளியிட்டது,


மாற்றுத்திறனாளிகளின் நீண்ட நாள் கனவான, சென்னை மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரைகளில் மாற்றுத்திறனாளிகள் கடல் நீரில் தங்களின் பாதத்தை பதித்து மகிழ் வூட்ட சிறப்பு பாதை அமைத்தல் போன்ற வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தில், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வணங்கி மகிழ்கிறோம்.

மேலும், உலகெங்கும் வாழும் மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கான உரிமைகளை பாதுகாத்து பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

இவ்வாறு ரெ.தங்கம் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கவிஞர் முடியரசன்**
**டிசம்பர் 3 (1998)**



**திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர்களில் ஒருவர்.**

**கழக இலக்கிய அணியின் தலைவராகப் பணியாற்றியவர்.**

**“1940க்குப் பின்னால் திராவிட இயக்கத்தின் சார்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட இதழ்களில் கொள்கை முழக்கம் செய்தவர். அதிலும் குறிப்பாக முரசொலியிலும் முத்தாரத்திலும் அவர் கவிதை இடம்பெறாத நாளே இருக்க முடியாது” எனத் தலைவர் கலைஞரால் நினைவு கூரப்பட்டவர்.**

**தமது மூத்த வழித்தோன்றல் இவர்தான் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகச் சார்பில் “கலைஞர் விருது” பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**